# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8040847

1. District மாவட்டம் : இராமநாதபுரம் PS: காவல்நிலையம் : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, இராமநாதபுரம் Year: ஆண்டு 2023 FIR No.: மு.த.அ. எண் 03/2023 Date: நாள் 04.01.2023

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: 120(B), 109, 464, 465, 420
(ii) Act சட்டம்: இ.த.ச Sections பிரிவுகள்: உ/இ 34
(iii) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம் 1988 ஊழல் தடுப்பு திருத்தச் சட்டம் 2018 Sections பிரிவுகள்: 13(2) உ/இ 13(1)(a)
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 2018-19 வரையில் Date to : நாள் வரை
Time Period நேர அளவு : — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
(b) Information Received at P.S. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 04.01.2023 Time நேரம் : 11.30 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 04.01.2023 Time நேரம் : 11.30 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக சேகரிக்கப்பட்ட ஆவணங்களின் மேல்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 10 கிலோமீட்டர் மேற்கில்
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி திருஉத்தரகோசமங்கை ஊராட்சி, இராமநாதபுரம் மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ஜா. ஜெகதீஷ் சந்திரபோஸ் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. ஜார்ஜ் வாஷிங்டன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1964 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation தொழில் காவல் துணை கண்காணிப்பாளர் (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு இராமநாதபுரம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. திரு. பாலகிருஷ்ணன், ஊராட்சி மன்றத் தலைவர் (தற்காலிக பணிநீக்கம்) 2. திருமதி. சோமசுந்தரி, உதவி பொறியாளர் 3. திரு. ஜி. கல்யாணசுந்தரம், உதவி செயற்பொறியாளர் 4. திரு. தெய்வநாதன், ஊராட்சி மன்ற செயலர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டவரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) சமர்ப்பிக்கிறேன் எதிரிகள்:

1) திரு.பாண்டி, த/பெ அரசன், வட்டார வளர்ச்சி அலுவலர், (தற்காலிக பணிநீக்கம்), கடலாடி, இராமநாதபுரம் மாவட்டம்.

2) திருமதி.ஹேமலதா, க/பெ செல்வ பெருமாள், உதவி பொறியாளர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம்.

3) திரு.ஆ.கல்யாணசுந்தரம், த/பெ இ.ஆறுமுகம், உதவி செயற் பொறியாளர், இராமநாதபுரம் ஊரக வளர்ச்சி உபகோட்டம், இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம்.

4) திரு. தெய்வநாதன், த/பெ சுப்பிரமணியன், ஊராட்சி மன்ற தலைவர், தூரங்கோட்டை ஊராட்சி, இராமநாதபுரம் மாவட்டம்.

சமர்ப்பிக்கிறேன் : இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு விழிப்பு அறிக்கை எண் 06/2020ன் தொடர்ச்சியாக இயக்குநர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அவர்களின் குறிப்பாணை எண் VR.No. 40281/2020/RDP/RM, நாள் 19.12.2022ன்படி காலம் 7ல் கண்ட 1 முதல் 4

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the investigation / Refused investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் [illegible] பதவி [illegible] பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
4/1/23

DEPUTY SUPDT. OF POLICE
VIGILANCE AND ANTI-CORRUPTION
RAMANATHAPURAM.
4/1/23

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
04.01.2023 - 12.30 மணி

Name: பெயர் [illegible]
Rank: நிலை [illegible] No. எண் .........

இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண் 3/2023 பிரிவு 13 (2) உ/இ 13 (1) (a) ஊழல் தடுப்பு சட்டம், 1988 ஊழல் தடுப்பு திருத்தச் சட்டம், 2018 மற்றும் சட்டப் பிரிவுகள் 120 (B) 409, 464, 465, 420 உ/இ 34 இ.த.ச. தொடரச்சி

வரையுள்ள எதிரிகள் மீது குற்ற எண். 3/2023 பிரிவு 13 (2) உ/இ 13 (1) (a) ஊழல் தடுப்பு சட்டம், 1988 ஊழல் தடுப்பு திருத்தச் சட்டம், 2018 மற்றும் சட்டப்பிரிவுகள் 120 (B) 409, 464, 465, 420 உ/இ 34 இ.த.ச. சட்டத்தின்படி 04.01.2023ம் தேதி 11.30 மணிக்கு பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்கின் விபரமானது,

காலம் 7ல் கண்ட எதிரி–1 திரு.அ.பாண்டி என்பவர் கடந்த 08.03.2019 முதல் 24.11.2019 வரை இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வட்டார வளர்ச்சி அலுவலராக பணிபுரிந்துள்ளார். எதிரி–2 திருமதி.ஹேமலதா என்பவர கடந்த 05.09.2018 முதல் 31.01.2020 வரை இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றிய உதவி பொறியாளராக பணிபுரிந்துள்ளார்.எதிரி–3 திரு.ஆ.கல்யாண சுந்தரம் என்பவர் கடந்த 19.09.2019 முதல் 23.02.2021 வரை இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றிய உதவி செயற் பொறியாளராக பணிபுரிந்துள்ளார் மற்றும் எதிரி–4 திரு.க.தெய்வநாதன் என்பவர் கடந்த 12/2019 முதல் இராமநாதபுரம் மாவட்டம் சூரங்கோட்டை ஊராட்சி மன்ற தலைவராக தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். இவர்கள் ஊழல் தடுப்பு சட்டம் மற்றும் ஊழல் தடுப்பு திருத்தச்சட்டம் 2018 சட்டப்பிரிவு 2 (c)ன் படி பொது ஊழியர் ஆவார்கள்.

கடந்த 2019–20ம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டம், சூரங்கோட்டை ஊராட்சியில் குடிநீர் தட்டுப்பாட்டை போக்குவதற்காக சூரங்கோட்டை கணக்கு எண்–1 பொதுநிதியிலிருந்து ஏற்கனவே பைப்லைன் இல்லாத இடத்தில் பைப்லைன் பராமரிப்பு பணிக்கென 1) ஸ்ரீகிருஷ்ணாபுரம், மருதுபாண்டியர் நகர் ஆகிய கிராமங்களுக்கு ரூபாய் 2.13 லட்சம் மதிப்பீட்டிலும், 2) முதுனாள், இடையர்வலசை ஆகிய கிராமங்களுக்கு ரூபாய் 3.47 லட்சம் மதிப்பீட்டிலும், 3) இடையர்வலசை, சூரங்கோட்டை ஆகிய கிராமங்களுக்கு ரூபாய் 4.64 லட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் 4) சூரங்கோட்டை ஊராட்சிக்கு சொந்தமான நீர்தேக்க தொட்டி முதல் இராமசாமி நகர் மற்றும் லெட்சுமணன் காலனி வரை ரூபாய் 3.11

லட்சம் மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் ரூபாய் 13,35,000/– மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகளை செய்வதற்கு எதிரி–1 திரு.அ.பாண்டி அவர்களால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டும், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டும், தூரங்கோட்டை ஊராட்சி தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண். ஊ.நி.1/2018, நாள் 10.10.2019ன்படி ஒப்பந்ததாரர் திரு.பாலசுப்பிரமணியன் என்பவருக்கு பணிகளை மேற்கொள்வதற்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாகவும், எதிரி–2 திருமதி.ஹேமலதா அவர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் ஊ.நி.3/5331/2017, நாள் 14.06.2019ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு, அதனை தொடர்ந்து எதிரி–3 திரு.கல்யாண சுந்தரம் அவர்களால் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டும், போலியான ஆவணங்கள் தயார் செய்தும், பைப் லைன் பராமரிப்பு செய்ததாக அளவீட்டுப் புத்தகங்கள் தயார் செய்தும், பணி முடிவு சான்று தயார் செய்தும், எதிரி–4 திரு.தெய்வநாதன், தூரங்கோட்டை ஊராட்சி மன்ற தலைவர் என்பவர் மேற்படி மேற்கொள்ளப்படாத பைப் லைன் பணிகளுக்கு தூரங்கோட்டை ஊராட்சி நிதி வங்கி கணக்கிலிருந்து ஒப்பந்ததாரருக்கு ரூபாய் 13,35,000/– விடுவித்து மேற்படி எதிரிகள் 1 முதல் 4 வரை உள்ளவர்கள் கூட்டாக சேர்ந்து அரசுக்கு மோசடி செய்துள்ளார்கள்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தூரங்கோட்டை ஊராட்சி கணக்கு எண்–1லிருந்து ஏதேனும் பணிகள் மேற்கொள்ள வேண்டுமெனில், ஊராட்சி மன்றத்தில் வேலைக்கான தீர்மானம் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) அவர்களால் நிறைவேற்றப்பட்டு, தொடர்ந்து ஊராட்சி ஒன்றிய பொறியாளரால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அந்த வேலைக்கான மதிப்பீட்டு அறிக்கையை வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) மூலமாக உதவி இயக்குனர் ஊராட்சிகள் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அதனடிப்படையில் மாவட்ட ஆட்சியர் / ஊராட்சிகளின் ஆய்வாளர் அவர்கள் வேலைக்கான நிர்வாக அனுமதி சம்பந்தப்பட்ட தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) அவர்களுக்கு அனுப்பி வைப்பார். அதனைத் தொடர்ந்து தொழில் நுட்ப அனுமதி வேண்டி ஊரக வளர்ச்சி உபகோட்ட உதவி செயற் பொறியாளர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். உபகோட்ட உதவி செயற் பொறியாளர்

அதனை கூர்ந்தாய்வு செய்து தொழில் நுட்ப அனுமதி வழங்குவார். தொழில் நுட்ப அனுமதி கிடைக்கப் பெற்றவுடன் ஊராட்சியின் மூலமாக தனி அலுவலர் ஒப்பந்தப்புள்ளி வேண்டி சம்பந்தப்பட்ட ஊராட்சியில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கும் மற்றும் செய்தித்தாள் மூலமாகவும் விளம்பரம் செய்யப்படவேண்டும். அதனடிப்படையில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு தனி அலுவலர், உதவி செயற் பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் ஆகியோர்களால் ஒப்பீடு செய்யப்பட்டு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாருக்கு தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களால் பணி உத்தரவு வழங்கப்படும். மேலும், பணி நடைபெறும் இடத்தில் நிதி ஒதுக்கீடு செய்யும் திட்டத்தின் பெயர் பணியின் விபரம், தொகை பணி நடைபெறும் ஆண்டு ஆகிய விபரங்கள் அடங்கிய பெயர் பலகை வைக்கப்பட வேண்டும். அதன் பிறகு பணி முழுமையாக முடிவடைந்த பின்பு சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாருக்கு சம்பந்தப்பட்ட ஊராட்சியின் தனி அலுவலர் அல்லது ஊராட்சி மன்ற தலைவர் மூலமாக பணம் பட்டுவாடா செய்யப்படும்.

எதிரி–1 திரு.அ.பாண்டி, வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) இராமநாதபுரம் என்பவர் சூரங்கோட்டை பஞ்சாயத்தில் பைப லைன் பதிக்கப்படாத இடங்களில் பைப் லைன் பராமரிப்பு செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றி, ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்து வேலை உத்தரவு வழங்கியுள்ளார். எதிரி–2 திருமதி.ஹேமலதா, உதவி பொறியாளர், இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியம் அவர்களால் மேற்கொள்ளப்படாத பைப் லைன் பராமரிப்பு பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்தும் மேற்படி பணிகளை அளவீடு செய்ததாக அளவுப் புத்தகம் மற்றும் பணி முடிவுபெற்ற சான்று (Work Completion Certificate) தயார் செய்துள்ளார். எதிரி–3 திரு.ஆ.கல்யாண சுந்தரம், உதவி செயற் பொறியாளர், இராமநாதபுரம் உட்கோட்டம் என்பவர் மேற்படி உதவி பொறியாளரால் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை அங்கீகரித்தும், மேற்படி பணிகளை ஆய்வு செய்ததாக அளவீட்டுப் புத்தகத்தில் மேலொப்பம் செய்தும், உதவி செயற் பொறியாளரால் தயார் செய்யப்பட்ட பணி முடிவு சான்றுக்கு மேலொப்பம்

செய்துள்ளார் மற்றும் எதிரி–4 திரு.தெய்வநாதன், சூரங்கோட்டை ஊராட்சி மன்ற தலைவர் என்பவர் மேற்படி மேற்கொள்ளப்படாத பைப் லைன் பணிகளுக்கு சூரங்கோட்டை ஊராட்சி நிதி வங்கி கணக்கிலிருந்து ரூபாய் 13,35,000/– விடுவித்துள்ளார்.

மேற்படி எதிரி–1 திரு.அ.பாண்டி, எதிரி–2 திருமதி.ஹேமலதா மற்றும் எதிரி–3 திரு.ஆ.கல்யாணசுந்தரம் ஆகியோர்கள் மீது G.O. (3D) No.08, Rural Development and Panchayat Raj (E2) Department, dated 17.03.2021 படி குற்ற வழக்கு தொடர்வதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து ஊழல் தடுப்பு திருத்தச் சட்டம் பிரிவு 17 (A)–ன்படி அனுமதி பெறப்பட்டும், எதிரி–4 திரு.தெய்வநாதன் என்பவர் மீது Pro.Roc.No.PA6/247/2022, dated 18.07.2022 of the Inspector of Panchayat/District Collector, Ramanathapuram பிரகாரம் குற்ற வழக்கு தொடர்வதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரியிடமிருந்தும் ஊழல் தடுப்பு திருத்தச் சட்டம் பிரிவு 17 (A) (1) ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஆகவே, மேற்படி எதிரிகள் மீது ஏற்கனவே பைப்லைன் இல்லாத இடத்தில் பராமரிப்பு பணிக்கென பணிகளை மேற்கொண்டதாகவும், பொதுமக்களின் குடிநீர் தேவையை இதுநாள் வரை பூர்த்தி செய்யாமலும் மோசடி மூலம் கூட்டுச்சதி செய்து மேற்படி தொகை ரூபாய் 13,35,000/– அரசிற்கு இழப்பீடு செய்ததற்காக பிரிவு 13 (2) உ/இ 13 (1) (a) ஊழல் தடுப்பு சட்டம், 1988 ஊழல் தடுப்பு திருத்தச் சட்டம், 2018 மற்றும் சட்டப்பிரிவுகள் 120 (B) 409, 464, 465, 420 உ/இ 34 இ.த.ச. சட்டத்தின்படியும் வழக்குப்பதிவு செய்யப்படுகிறது. இதன் முதல் தகவல் அறிக்கையின் அசலை முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் / சிறப்பு நீதிமன்றம், இராமநாதபுரம் மாவட்டம் அவர்களுக்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன்.

24/11/23

DEPUTY SUPDT. OF POLICE
VIGILANCE AND ANTI-CORRUPTION
RAMANATHAPURAM.